


ஒரு வளமான, நியாயமான ஒன்ராறியோவுக்கான ஒரு வரவுசெலவுத் திட்டம்
*வேலைவாய்ப்புகளை உருவாக்கியும் மக்களுக்கு ஆதரவளித்தும்*
*புதிய ஒன்ராறியோ அரசாங்கம் உதவுகிறது*

**செய்திகள்** மே 2, 2013

ஒன்ராறியோவின் 2013 க்கான வரவுசெலவுத் திட்டம் - ஒரு வளமான, நியாயமான ஒன்ராறியோ – பொருளாதாரத்தை வலுவாக்கவல்ல சாதுரியமான முதலீடுகளைச் செய்யும்; இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும்; 2017-18 அளவில் பற்றாக்குறையை அகற்ற நடவடிக்கை எடுக்கும்.

2013 க்கான ஒன்ராறியோ வரவுசெலவுத்திட்டம் பின்வருவனவூடாக ஒரு வளமான, நியாயமான ஒன்ராறியோவை முன்மொழிகிறது:

- சுமார் 30,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, வழிகாட்டி வாய்ப்புக்களை உருவாக்கவும், தொழில் முயற்சி, புத்தாக்கம் என்பவற்றை ஊக்குவிக்கவும் என இரண்டு வருடங்களுக்கு 295 மில்லியன் டொலர் இளைஞர் வேலைவாய்ப்பு உபாயம் ஒன்றினை நிறுவுதல்
- பொதுசனப் போகுவரத்து, வீதிகள், பாலங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் போன்றவற்றிற்கான உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதனூடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்
- ஒன்பது மில்லியன் சாரதிகளுக்கான வாகனக் காப்புறுதி வீதங்களை சராசரி 15 சதவீதத்தால் குறைத்தல்
- மேலும் 46,000 மக்கள் வீட்டுப்பராமரிப்பையும், சமூகப் பராமரிப்பையும் விரைவாகத் தத்தமது வீடுகளில் சௌகரியமாகப் பெற உதவுதல்
- கூடுதலான வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கென, சிறுவணிகங்களுக்கான வேலைவழங்குவோர் ஆரோக்கிய வரி (Employer Health Tax) விலக்கை 400,000 டொலரிலிருந்து 450,000 டொலர் ஊதியமாக உயர்த்தி, வரி நிவாரணம் வழங்குதல்
- சமூகநல உதவி பெறுவோர் வேலைவாய்ப்புக்களைப் பெற்று, தமது பொருளாதாரப் பாதுகாப்பை மேம்படுத்திக்கொள்ள உதவும்பொருட்டு, சமூகநல உதவியினை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

../2

2012-13 காலப் பகுதிக்கான பற்றாக்குறை இப்போது 9.8 பில்லியன் டொலராகக் கணிப்பிடப்பட்டுள்ளது – 2012 க்கான வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்வுகூறப்பட்டதோடு ஒப்பிடும்போது ஒரு 5.0 பில்லியன் டொலர் முன்னேற்றம். அண்மையில் முடிவடைந்த அரசநிதியாண்டு, தொடர்ந்து நான்காவது வருடமாக எதிர்வுகூறப்பட்டதைவிடக் குறைவான பற்றாக்குறையை மாகாணம் அறிவித்திருப்பதாகச் சுட்டிக் காட்டுகிறது - இம்மட்டத்திலான வெற்றியை கனடாவில் எய்திய ஒரேயொரு அரசாங்கம். நிகழ்ச்சித்திட்ட செலவின வளர்ச்சியானது, தொடர்ந்து இரண்டாவது வருடமாக, ஒரு சதவீதத்திற்கும் குறைவானதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

2013-13 பற்றாக்குறை இலக்கைத் தோற்கடித்தமைக்கும் மேலாக, 2012 க்கான வரவுசெலவுத் திட்டத்தில் கணிப்பிடப்பட்ட 12.8 பில்லியன் டொலர் பற்றாக்குறையிலிருந்து, ஒரு 1.0 பில்லியன் டொலர் முன்னேற்றத்தை, 2013-14க்கு மாகாணம் கணித்துள்ளது. 2013-14 நிகழ்ச்சித் திட்டச்செலவினம் 2012 வரவுசெலவுத் திட்டக் கணிப்பீட்டிலிருந்து மாறவில்லை. 2012 க்கான வரவுசெலவுத் திட்டத்தில் காட்டப்பட்ட பாற்றாக்குறை இலக்குகளின் படிப்படியான வீழ்ச்சியை, 2013-14க்குப் பின்னரும் எய்தி, 2017-18இல் 0.5 பில்லியன் டொலரை மிகையாக எய்துவதற்குரிய சரியான பாதையில் அரசாங்கம் உள்ளது.

முக்கிய பங்காளிகளுடன் பணியாற்றி, வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்குமான புதிய வாய்ப்புக்களை ஒன்ராறியோவின் பொருளாதாரம் கைப்பற்ற உதவும், ஒரு ஆறுபாக பொருளாதாரப் புதுப்பித்தல் திட்டத்தை அரசாங்கம் முன்வைக்கின்றது.

1. **போட்டிமிக்க வணிகச் சூழல்** — ஒரு போட்டிமிக்க வரி முறைமையையும் பயனுள்ள விதிமுறைகளையும் ஆதரித்தல், வேலைவாய்ப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமான புதிய வணிக முதலீட்டை ஊக்குவிக்கும்.

2. **நவீன உட்கட்டமைப்பு** – போக்குவரத்து, வீதிகள், பாடசாலைகள், மருத்துவமனைகளில் முதலீடு செய்தல், ஓர் ஆக்கபூர்வமான பொருளாதாரத்துக்கான ஒரு முக்கிய அடித்தளமாகும்.

3. **உயரிய வினைத்திறன் மிக்க வேலைப்படை** – வினைத்திறன்களிலும் கல்வியிலும் இளைஞர் வேலைவாய்ப்பிலும் முதலிடுதல், இம்மாகாணத்து மக்கள் வேலைசெய்து வளம்பெற முடியும் என்பதை உறுதிசெய்கிறது.

4. **தொழில் முயற்சியையும் புத்தாக்கத்தையும் ஊக்குவித்தல்** – யோசனைகளைப் பூகோளப் பொருளாதாரத்திற்கேற்ற புதுமையான பொருட்களாயும் சேவைகளாயும் மாற்றியமைப்பதற்கு ஒன்ராறியோவின் ஆற்றலை வலுப்படுத்தல்.

5. **உலகமயமாதல்** – பொருட்கள் சேவைகளுக்கான சந்தை அணுகலை ஒன்ராறியோவின் எல்லைகளுக்குமப்பால், ஏனைய மாகாணங்களுக்கும், அமெரிக்காவுக்கும், வளர்ந்துவரும் பொருளாதாரங்களுக்கும் விரிவுபடுத்தவென வணிகங்களுடன் செயற்படுதல்.

6. **துடிப்பான, வலுவான சமூகங்கள் –** வேலைவாய்ப்பு உருவாக்கம், பொருளாதார வளர்ச்சி என்பவற்றிலிருந்து சகல சமூகங்களும், பிராந்தியப் பொருளாதாரங்களும் பயன்பெற உதவுதல்.

புதிய அரசாங்கம் ஒன்ராறியோவிலுள்ள குடும்பங்களுக்குக் கூடுதலான ஆதரவை வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும். ஒன்ராறியோவின் பூர்வீகக் குடிமக்களுக்கான வாய்ப்புக்களை மேம்படுத்தி, அதிக பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்களைப் பாதுகாத்து, பாதுகாப்பான, வலுவான சமூகங்களைக் கட்டியெழுப்பும்.

ஒன்ராறியோவின் 2013 க்கான வரவுசெலவுத் திட்டமானது ஒரு நியாயமான, வளமான ஒன்ராறியோவை, சகலரதும் நன்மைக்காகக் கட்டியெழுப்பும்.

**மேற்கோள்கள்**

"ஒன்ராறியோவின் சகல மக்களுக்கும் உதவிசெய்வதற்கும், 2017-18 அளவில் பற்றாக்குறையை அகற்றுவதற்கும் புதிய அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. எமது அரசநிதியாண்டு இலக்குகளை வென்றெடுப்பதன் மூலம், தினமும் மக்களுக்கு முக்கியமான விடயங்களில் நாம் தொடர்ந்து முதலீடு செய்யலாம். சுகநலப் பராமரிப்பையும் கல்வியையும் நாம் பாதுகாக்கின்றோம். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை நாம் உருவாக்குகின்றோம். பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான எமது சமநிலையான அணுகுமுறையானது வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, ஒரு வளமான, நியாயமான ஒன்ராறியோவைச் சகலருக்குமாகக் கட்டியெழுப்பும்."

— Charles Sousa, நிதியமைச்சர் (Minister of Finance)

**விரைவான உண்மைகள்**

- உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சியை 2013இல்1.5 சதவீதமாகவும், 2014இல் 2.3 சதவீதமாகவும், 2015, 2016களில் 2.4 சதவீதமாகவும் அரசாங்கம் மதிப்பிடுகின்றது.

- 1,000க்கும் மேலானவர்களுடன் வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்னரான கலந்தாலோசனைகளை அரசாங்கம் நிகழ்த்தியுள்ளது; அத்துடன் ஒன்ராறியோ முழுவதும் உள்ள சமூகங்களின் 600,000க்கும் அதிகமான குடும்பங்களிடமிருந்து தொலைபேசி வழியாகக் கேட்டறிந்துள்ளது.

- 2012-13க்கான அரசநிதியாண்டு இலக்குகளை வென்றெடுக்ககூடிய வகையில், சரியான பாதையில் செல்லும், கனடாவின் ஆக இரண்டு அரசாங்கங்களில், தற்போது ஒன்ராறியோவும் ஒன்று. 2017-18 அளவில் பற்றாக்குறையை அகற்றுவது குறித்த அரசாங்கத்தின் குறிக்கோளின் விளைவுகளே இவை - இது வரவுசெலவுத் திட்டம் சமப்படுத்தப்பட்டதும், நிகர

கடனளவைப் பொருளாதார மந்தநிலைக்கு முன்னரான 27 சதவீதத்திற்குக் குறைக்கும் இலக்கினால் மீள்வலியுறுத்தப்பட்ட ஒரு பொறுப்பாகும்.

- பொருளாதார மந்தநிலையின்போது இழந்த அனைத்து வேலைவாய்ப்புக்களையும் மீட்டெடுத்து, ஜூன் 2009 முதல் கிட்டத்தட்ட 400,000 வேலைவாய்ப்புக்களை ஒன்ராறியோ உருவாக்கியுள்ளது. பொருளாதார மந்தநிலைக்கு முன்னரான உச்சப் புள்ளிக்கு மேலாக, தற்போதைய வேலை மட்டம் 130,000க்கும் அதிகமானதாகும்.

- அடுத்த மூன்று வருடங்களுக்கான ஒன்ராறியோவின் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு முதலீடுகளின் 35 பில்லியன் டொலருக்கும் அதிகமான பணம், சராசரி ஒவ்வொரு வருடமும் 100,000க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்களுக்கு ஆதரவளிக்கும்.

- ஒன்ராறியோ பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினது (The Commission on the Reform of Ontario's Public Services) 362 பரிந்துரைகளில் 60 சதவீதமானவற்றுடன் அரசாங்கம் முன்னோக்கி நகர்ந்துகொண்டும், ஏனையவற்றின் செயற்படுத்தல் பற்றிப் படித்துக்கொண்டும் இருக்கிறது.

**மேலும் அறிந்துகொள்ளுங்கள்**

வரவுசெலவுத்திட்டத்தை வாசியுங்கள்.

வரவுசெலவுத்திட்ட உரையைப் பாருங்கள் .

வரவுசெலவுத்திட்டப் புகைப்படங்களைப் பாருங்கள்.

வரவுசெலவுத் திட்டத்தின் பின்புலத் தகவல்களை வாசியுங்கள்
- ஒன்ராறியோவின் பொருளாதார நோக்கும் அரசநிதித் திட்டமும்
- ஒன்ராறியோ சாரதிகள் பணம் சேமிக்க உதவுதல்
- ஒரு நியாயமான சமுதாயம்
- ஒன்ராறியோ ற்றில்லியம் பயன்பாடு: மக்களுக்குக் கூடுதலான தெரிவுகள்
- இளைஞர் வேலைவாய்ப்பு உருவாக்கம்

வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய விடயங்களை வாசியுங்கள்.

---

**ஊடக விசாரணைகளுக்கு மட்டும்:**

**ontario.ca/finance-news**

Susie Heath, அமைச்சரின் அலுவலகம் (Minister's Office),
416-325-3645
Scott Blodgett, நிதியமைச்சு (Ministry of Finance),
416-325-0324

**பொதுசன விசாரணைகளுக்கு அழையுங்கள்:**
1-800-337-7222
TTY: 1-800-263-7776